**கோயம்புத்தூர் மாநகராட்சி கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை :- திருமதி.ஆ.வள்ளியம்மாள். எம்.எஸ்.சி., எம்.எட்.,எம்.ஃ.பில்.,**

**ந.க.எண். /2020/கே 5** **நாள். .11.2020**

**பொருள்:** கல்வி – கோயம்புத்தூர் மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் மற்றும் உற்று நோக்கல் பயிற்சியினை இணையவழியில் மூலம் தொடங்க அனுமதி கோரியது – அனுமதி வழங்குதல் - சார்பாக.

**பார்வை :** டாக்டர்.எம்.லெனார்ட் அசோக், தலைவர், சி.எம்.எஸ். கல்வியியல் கல்லூரி, கணபதி, கோயம்புத்தூர் அவர்களின் விண்ணப்ப நாள்.18.11.2020.

-------------

கோயம்புத்தூர் சி.எம்.எஸ். கல்வியியல் கல்லூரி தலைவர் டாக்டர்.எம்.லெனார்ட் அசோக் அவர்கள் தனது பல்கலைக்கழகத்தில் பி.எட். பயிலும் மாணவ மற்றும் மாணவியர்களுக்கு இணைக்கப்பட்டுள்ள பட்டியலின்படி கோயம்புத்தூர் மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு கற்றல் கற்பித்தல் மற்றும் உற்று நோக்கல் பயிற்சியினை இணைய வழியாகவும் (online) பள்ளிகள் திறந்தவுடன் நேரடியாகவும் பயிற்சிகள் மேற்கொள்ள 30.11.2020 முதல் 16 வாரங்களுக்கு அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்</u>**

| | |
|---|---|
| **1.** | பயிற்சி மாணவர்கள் தங்கள் கற்றல், கற்பித்தல் பணிகளை பள்ளிப் பணிகளுக்கு இடையூறு ஏற்படாதவாறு பயிற்சி பெற வேண்டும். |
| **2.** | உரிய தயாரிப்புகளுடன் மேற்பார்வை ஆசிரியரின் மேற்பார்வையில் கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ள வேண்டும் மேற்பார்வை ஆசிரியர் இன்றி கற்பித்தல் பயிற்சி மேற்கொள்வது கண்டறியப்பட்டால் இவ்வாணை முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும். |
| **3.** | பயிற்சி மாணவர்கள் பயிற்சி பெறும் பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் பிற கல்வித்துறை உயர் அதிகாரிகளின் ஆணை மற்றும் அறிவுரைப்படி பயிற்சி மேற்கொள்ள வேண்டும். |
| **4.** | பயிற்சி மாணவர்கள் பயிற்சி பெறும் பள்ளித் தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மற்றும் பிற கல்வித்துறை அதிகாரிகளிடம் மரியாதையுடனும், கண்ணியத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். |
| **5.** | பயிற்சி மாணவர்கள் பயிற்சியின்போது பிற கல்வியியல் கல்லூரிகளிலிருந்து மாணவ,மாணவியர்களுக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது. |
| **6.** | பள்ளியில் பயிற்சி பெற தற்போது அனுமதிக்கப்படும் பயிற்சி மாணவர்கள் எவரேனும் ஒழுங்கீனமாக நடந்து கொண்டால் தலைமையாசிரியரால் உடன் பயிற்சியிலிருந்து விடுவிக்கப்படுவர். |